DEPOSITION OF WITNESS

Judicial Form No. 53

(See Rule 42)

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, No.I, UDUMALPET**

| | | |
|---|---|---|
| Calender | : | CC No. 280/2025 |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Sessions | : | |
| Deposition of Witness for Prosecution | : | L.W. 2 P.W.1 |

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | : மோகன் பிரபு | தொழில் | : | |
| தகப்பனார் பெயர் / கணவர் பெயர் | : | ஜாதி | : | |
| கிராமம் | : | இனம் | : | |
| தாலூக்கா | : | வயது | : | |
| Mail ID | : | Mobile No. | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969, (Central Act 44 of 1969) on 07.05.2026.

**எதிரி ஆஜர்**

**முதல் விசாரணை**

நான் உடுமலைப்பேட்டை காவல் நிலையத்தில் பீட்டு போலிசராக பணியில் இருந்த போது கடந்த 01.05.2025 ம் 13.00 மணிக்கு நானும், காவலர் சங்கர் மற்றும் உதவி ஆய்வாளர் உமா மகேஷ்வரி ஆகியோர் உடுமலைப்பேட்டை காவல் நிலைய எல்லைக்குட்பட்ட இடங்களில் மது விலக்கு சம்பந்தமாகவும் குற்றத்தடுப்பு ரோந்து அலுவலாகவும், சட்ட விரோதமாக மது பாட்டில்கள் விற்பனை செய்யப்படுகிறதா என்பதை அறிய ரோந்து சென்று கண்காணித்த போது உடுமலைப்பேட்டை அனுஷம் தியேட்டர் டவர் டாஸ்மார்க் அருகில் சென்ற போது அங்கு ஒரு நபர் கையில் ஒரு பையுடன் உட்கார்ந்து கொண்டிருந்தார். மேலும் அவரிடம் இரண்டு பேர் ஏதோ வாங்கி கொண்டிருந்தார்கள். போலிஸ் பார்ட்டிகளை பார்த்ததும் வாங்கி கொண்டிருந்த 2 நபர்கள் தப்பி ஓடி விட்டார்கள். ஒருவர் கையில் பையுடன் உட்கார்ந்திருந்தவர் ஓட முயற்சித்த போது அவரை பிடித்து விசாரித்த போது முன்னுக்கு பின் முரணாக பதில் சொன்னவர், பின்னர் அவர் பெயர் அய்யாவு த/பெ.முருகவேல் என்றும் மடத்துக்குளம் என்றும் கூறினார். மேலும் அரசு மதுபனக்கடையிலிருந்து மது

பாட்டில்களை வாங்கி அதிக விலைக்கு விற்றால் லாபம் கிடைக்கும் என்று சொன்னவரிடம் இருந்து 180 Ml அளவுள்ள Express பிராந்தி பாட்டில்கள் – 7 விற்பனைக்காக வைத்திருந்த குற்றத்தை ஒப்புக் கொண்டாவரை கைதிற்கான காரணம் கூறி காவல் உதவி ஆய்வாளர் எதிரியை கைது செய்தார். பின்னர் எதிரியிடம் இருந்து கைப்பற்றப்பட்ட 7 பிராந்தி பாட்டில்கள் மற்றும் வெள்ளை நிற பையை உதவி ஆய்வாளர் கைப்பற்றுதல் மகசரில் கைப்பற்றி சாட்சி கையொப்பம் பெற்றும் வாக்குமூலம் பதிவு செய்தார். பொது ஜன சாட்சிகள் யாரும் இல்லாததால் நானும் காவலர் சங்கர் என்பவரும் சாட்சி கையொப்பம் செய்தோம் . என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் உள்ள 1 வது கையெழுத்து என்னுடைய தான். **கைப்பற்றுதல் மகசர் அசா.ஆ.1 என குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர் எதிரியையும் வழக்கு சொத்துக்களையும் காவல் நிலையம் கொண்டு சென்று பின்னர் உதவி ஆய்வாளர் எதிரியின் மீது முதல் தகவல் அறிக்கை தயார் செய்தார். அவருக்கு உதவியாக நாங்கள் இருந்தோம். இது சம்பந்தமாக உதவி ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. சம்பவ நடந்த இடத்திற்கும் மத்திய பேருந்து நிலையத்திற்கும் உள்ள தூரம் எவ்வஹள என்றால் சுமார் 300 மீட்டர் இருக்கும். எதிரியை கைது செய்து இடம் ஆள் நடமாட்டம் இருந்த இடம என்றால் சரிதான். போலிஸ் பிரச்சனை என்பதால் யாரும் முன் வரவில்லை. எதிரி மட்டும் தான் இருந்தார் என்றால் 2 பேர்உடன் இருந்தார்க் போலிசாரை பார்த்ததும் ஓடிவிட்டார்க பிடித்தஇடத்தில் கடைகள் இல்லை என்றால் கடைகள் மூடியிருந்தது மதியம் 1.00 மணி மேல் என்பதால் . 1.00–2.00 மணி வரை இருக்கும் என்றால் சரிதான் . முதல் விசாரணையில் 4.00 மணி என்று சொல்லியுள்ள நிலையில் தற்போது 1.00 மணி என்று எவ்வாறு சொல்கிறிர்கள் என்றால் அன்றைய தினத்தில் 3 வழக்குகள் போட்டதால் எந்த வழக்கு என்று சரியாக தெரியவில்லை. தற்போது தான் சரியாக தெரிந்தது.
2. கைப்பற்றுதல் மகசரில் பொது மக்கள் சாட்சிகள் யாரும் இல்ரலை என்றாலும் போலிசார் தான் கையெழுத்து போட்டுள்ளிர்கள் என்றால் சரியல்ல. சொன்ன நேரத்தில் சொன்ன இடத்தில் சம்பவம் நடைபெறவில்லை என்றால் 01.05.2025 ம் தேதி என்பதல் டாஸ்மார்க் கடை விடுமுறை என் நிலையில் அவர் கையில் 7 பாட்டில் வைத்திருக்க வேண்டிய அவசியம் இல்லை. 100 க்கு போன் வந்து பின்னிட்டு 2, 3 முறை சென்று பார்த்தோம். எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல. பொய்யாக சாட்சியம் அளிக்கிறிர்கள் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

Sd/-T.Nithyakala,B.Com.,B.L.,
நீதித்துறை நடுவர் எண்.1
உடுமலைப்பேட்டை.